**THE LABOUR COURT, SALEM**
**C.P.No.106 of 2021**

<u>14.08.2025</u>

**PW1 – திருமதி. மணிமாலா**

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை– (எதிர்மனுதாரர் தரப்பில்)**

என் கணவர் எதிர்மனுதாரர் போக்குவரத்துக்கழகத்தில் முதுநிலை நடத்துநராக பணிபுரிந்து 31.03.2015 ல் பணிஓய்வு பெற்றார் என்றால் சரிதான். அதன் பின்னிட்டு 03.06.2015 ல் என் கணவர் காலமாகிவிட்டார். நான் தாக்கல் செய்த கணக்கீட்டு மனு ஏற்கனவே தொழிற்தாவா நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அதில் ஏற்பட்ட தீர்வத்தின் அடிப்படையிலோ, செட்டில்மெண்ட் ஆவணப்படியோ தாக்கல் செய்யாமல் நேரடியாக தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

என்னுடைய கணக்கீட்டு மனுவில் 7 இணங்களில் எனது கணவருக்கான ஒய்வூதிய பலன்களை கேட்டுள்ளேன் என்றால் சரிதான். கணக்கீடுகள் எந்த ஆவணத்தின் அடிப்படையில் கேட்டுள்ளேன் என்று எனக்கு தெரியாது. இவ்வழக்கில் எதிர்மனுதாரர் தாக்கல் செய்திருந்த எதிருரையை முழுமையாக படித்துப்பார்த்தேன் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் பதிலுரையில் சொல்லியுள்ள விபரங்களை மறுத்து என்னுடைய சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய கணவரின் பணிக்காலத்தில் நிர்வாகம் என் கணவருக்கு 24 முறை தண்டனைகள் கொடுத்துள்ள விபரம் எனக்கு தெரியாது. 24 முறை வழங்கப்பட்ட தண்டனைகள் எல்லாமே ஊதிய உயர்வை தள்ளிவைத்தல் தொடர்பான தண்டனைகள் என்றால் தண்டனைகள் விபரம் தெரியாது. எதிர்மனுதாரர் தாக்கல் செய்த பதிலுரையில் என் கணவருக்கு வழங்கப்பட்ட 24 தண்டனைகள் குறித்து சொல்லப்பட்டுள்ளது என்றால் தெரியவில்லை.

என் கணவரின் முன்பணிக்கால தண்டனைகள் விபரங்கள்

தெரியாமலேயே இந்த கணக்கீட்டு மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் கணவரின் ஓய்வூதியத்தை நான் வாங்கிக்கொண்டுள்ளேன் என்றால் சரிதான். என் கணவருக்குண்டான ஓய்வூதிய நிலுவை ரூ.3,17,428/- ஏற்கனவே நிர்வாகம் வழங்கியுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு வழங்கப்பட்ட ஓய்வூதியம் 119% அகவிலைப்படி அடிப்படையில் வழங்கப்பட்டது என்றால் தெரியவில்லை.

என்னுடைய கணவர் பணியிலிருந்து பணிஓய்வு பெறும்போதும் ஏற்கனவே அவருக்கு வழங்கப்பட்ட தண்டனைகள் நிலுவையில் இருந்தது என்றால் அதுபற்றி தெரியவில்லை. அமல்படுத்த முடியாத தண்டனைகள் நிலுவையில் இருந்ததால் அவருடைய ஓய்வூதிய பலன்களிலிருந்து நிர்வாகம் ரூ.1,26,025/- பிடித்தம் செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. என்னுடைய மனுவிலும், பிரமாண வாக்குமூலத்திலும் பிடித்தம் செய்யப்பட்ட மேற்படி தொகையை வட்டியுடன் திரும்ப செலுத்துமாறு கோரியுள்ளேன் என்றால் சரிதான். என் கணவருக்கு வழங்கப்பட்ட தண்டனைகள் தொடர்பாக எதிர்மனுதாரர் நிர்வாக இயக்குநரோ, அல்லது கனம் நீதிமன்றத்தாலோ ரத்து செய்யப்படாத நிலையில் அபராக தொகையை கோருவதற்கு எங்களுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. என் கணவருக்கு ஊதிய உயர்வு தள்ளிவைக்கப்பட்டதாட்ல அதன் அடிப்படையில் சரியான கணக்கீடு செய்யப்பட்டு என் கணவரது ஓய்வூதிய பலன்கள் வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. மனுவில் என் கணவரது ஓய்வூதிய தொகையை மிகைப்படுத்தி கேட்டுள்ளேன் என்றும் அதனால் அந்த தொகையை நிர்வாகம் வழங்க கடமைப்படவில்லை என்றால் சரியல்ல. என் கணவருக்கு ERBS தகுதியான தொகை ரூ.12,100/- மட்டும் எனறும் மனுவில் மிகைப்படுத்தி ரூ.77,000/- வரவேண்டும் என்று கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல. என் கணவர் பணிஓய்வு பெற்றபோது அவருக்குண்டான அடிப்படை சம்பளம், தரஊதியம், அகவிலைப்படி, வீட்டு வாடகைப்படி இவை அனைத்தும் சேர்ந்து ரூ.21,784/- என்றும், அதன் அடிப்படையில் என் கணவரது கணக்கில் 1.5 நாட்கள் ஈட்டிய விடுப்பு இருந்தது என்றும், அதற்கான தொகை ரூ.1,089/-

04.02.2022 தேதியிட்ட காசோலை எண்.043226 ன்படி எனக்கு வழங்கப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. வருங்கால வைப்பு நிதி ரூ.1,11,630/– எனக்கு 01.09.2018 தேதியிட்ட காசோலை எண்.836682 ன்படி வழங்கப்பட்டுவிட்டது என்றால் சரிதான். என் மனுவிலும், சாட்சிய பிரமாண வாக்குமூலத்திலும் வருங்கால வைப்புநிதி காலதாமதமாக கொடுக்கப்பட்டதால் அதற்கான வட்டி கோரியுள்ளேன் என்றால் சரிதான். என் கணவரின் இறப்பு சான்றிதழ், வாரிசு சான்றிதழ் வாங்கிக்கொடுக்க காலதாமதப்படுத்தினேன் என்றும் அதனால் நிர்வாகத்திடம் வட்டி கோர இயலாது என்றும் சொன்னால் சரியல்ல. நிர்வாகம் ஒப்புக்கொண்டுள்ள வழங்கிய தொகைகள் தவிர்த்து பிற தொகைகள் தகராறுக்குரிய தொகைள் என்பதால் அதை இந்த கணக்கீட்டு மனு மூலம் கோரஇயலாது என்றால் சரியல்ல. நிர்வாகத்தால் எங்களுக்கு வழங்கப்படவேண்டிய தொகை எதுவும் இல்லை என்பதால் மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/ (M. Shanthi)
Presiding Officer,
Labour Court, Salem